மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து மக்களவையில் விவாதம்

புது தில்லி, ஜூலை 21: நாடாளுமன்றம் செவ்வாய்க்கிழமை கூடுவதற்கு முன்பாக, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை ராகுல் காந்தி மற்றும் சில எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சந்தித்து, தேர்வு முறைகேடுகளுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீஸார் நடத்திய தாக்குதல் குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'மக்களவைத் தலைவரைச் சந்தித்து, தேர்வு முறைகேட்டை கண்டித்து கண்டனப் பேரணி நடத்தியவர்கள் மீது போலீஸ் நடத்திய தாக்குதல் குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். அரசின் தோல்வி குறித்து கேள்வி எழுப்பியதற்காக மாணவர்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்திய இளைஞர்களின் எதிர்காலம் குறித்து விவாதிக்க முடியாது என்றால், நாடாளுமன்றத்தால் என்ன பயன்?

இந்த விவகாரம் புதைந்துபோக எதிர்க்கட்சிகள் அனுமதிக்காது. மாணவர்களின் குரல்கள் தெருக்களிலும், நாடாளுமன்றத்திலும் கேட்கப்படுவதை உறுதி செய்வோம்' என்று குறிப்பிட்டார்.

'இந்த விவகாரத்தில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாடாளுமன்றத்தில் பதிலளிக்க வேண்டும்' என்று காங்கிரஸ் மக்களவை கொறடா மாணிக்கம் தாக்குர் வலியுறுத்தினார்.

முன்னதாக, இண்டி கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற குழு தலைவர்கள் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறையில் செவ்வாய்க்கிழமை காலை ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலர்கள் ஜெய்ராம் ரமேஷ், கே.சி. வேணுகோபால், தர்மேந்திர யாதவ், தேசியவாத காங்கிரஸ் (பவார்) கட்சி எம்.பி. சுப்ரியா சுலே, சிவசேனை (உத்தவ்) எம்.பி. சஞ்சய் ரெளத், மார்க்சிஸ்ட் எம்.பி.க்கள் ஜான் பிர்ட்டாஸ், பி. சந்தோஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் திங்கள்கிழமை கூடியது. முதல் நாளிலேயே, நீட் வினாத் தாள் கசிவு, ராமர் கோயில் நன்கொடை முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கலை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பி தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனால், மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் அடுத்தடுத்து 6 முறை ஒத்திவைக்கப்பட்டு, இறுதியில் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

இதனிடையே, தேர்வு முறைகேடுகளைக் கண்டித்து கரப்பான் பூச்சி ஜனதா கட்சி சார்பில் திங்கள்கிழமை நாடாளுமன்றத்தை நோக்கிய பேரணி நடத்தப்பட்டது. அவர்களைக் கட்டுப்படுத்த, காவல் துறை தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் விரட்டியடித்தனர். இதில், மாணவர்கள் உள்பட போராட்டத்தில் பங்கேற்ற பலர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓம் பிர்லாவிடம் ராகுல் வலியுறுத்தல்

மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள்.

பிரதமர், அமித் ஷா பதவி விலக வேண்டும்: ராகுல்

புது தில்லி, ஜூலை 21: 'தில்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீஸார் நடத்திய தாக்குதலுக்கு பிரதமர் நரேந்திர மோடி மன்னிப்பு கேட்பதோடு, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் சேர்ந்து பிரதமரும் பதவியை ராஜினாமா செய்யவேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டி: மாணவர்கள் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதிக்கக் கோரி ஓம் பிர்லாவை சந்தித்து வலியுறுத்தினோம். அரசுடன் ஆலோசித்துவிட்டு இதுகுறித்து முடிவெடுப்பதாக ஓம் பிர்லா தெரிவித்தார்.

இது மாணவர்கள் மற்றும் நாட்டின் எதிர்கால இளைஞர்கள் தொடர்பான விவகாரம். அவர்கள் தாக்கப்படும் விதம் முற்றிலும் இந்திய பண்பாட்டுக்கு முரணானது. இந்த தாக்குல் சம்பவத்துக்கு பிரதமர் மோடி இதுவரை மன்னிப்புகூட கேட்கவில்லை.

கல்வி மற்றும் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக மாணவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர். கல்வி முறை, தேர்வு முறை எந்த அளவுக்கு மோசமடைந்துள்ளது என்பதை ஒட்டுமொத்த நாடும் அறியும்.

இந்த விவகாரத்தில் பிரதமர் மெளனமாக இருப்பது ஏன்? மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பிரதமர் மன்னிப்பு கேட்க வேண்டும். தேர்வு முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியை ராஜினாமா செய்யவேண்டும். மேலும், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீஸ் நடத்திய கொடூர தாக்குதலுக்கு பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பதவி விலக வேண்டும். அவருடன் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்றார்.

டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு: சந்தை நிலவரமே காரணம்

புது தில்லி, ஜூலை 21: அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சந்தை நிலவரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் எழுத்துபூர்வமாக செவ்வாய்க்கிழமை அளித்த பதில்: அந்நிய செலாவணிக்கு நிகராக இந்திய ரூபாய்க்கு என்ன மதிப்பு இருக்க வேண்டும், என்ன வரம்புக்குள் அந்த மதிப்பு இருக்க வேண்டும் என்று மத்திய அரசோ, ரிசர்வ் வங்கியோ தீர்மானிப்பதில்லை. சந்தை நிலவரத்தின் அடிப்படையில்தான் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது.

அந்நிய செலாவணிக்கு நிகராக ரூபாய் மதிப்பில் ஏற்படும் மாற்றம் உள்பட முக்கிய பொருளாதார அளவீடுகளின் போக்குகளையும், அவை பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதி ஸ்திரத்தன்மையில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இந்த விவகாரங்கள் குறித்து மத்திய அரசின் பல்வேறு தளங்களில் பல நிலைகளில் விவாதிக்கப்படுகின்றன.

மேலும் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய உலகளாவிய முக்கிய நிகழ்வுகளை ரிசர்வ் வங்கி உன்னிப்பாக கவனித்து வருகிறது என்று தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வர்த்தகத்தின் தொடக்கத்தில் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவை சந்தித்து, பின்னர் 12 காசுகள் உயர்ந்து ரூ.96.24-ஆக நிலைப்பெற்றது.

2026-ஆம் நிதியாண்டின் கடன்-ஜிடிபி விகிதம் 58.2 சதவீதமாக குறைவு

புது தில்லி, ஜூலை 21: *2025-26-ஆம் நிதியாண்டின் கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) விகிதம் 58.2 சதவீதமாக குறைந்துள்ளதாக மாநிலங்களவையில் மத்திய அரசு செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.*

இதுகுறித்து மத்திய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் செளதரி மாநிலங்களவையில் அளித்த எழுத்துபூர்வ பதிலில், '2026, மார்ச் 31 நிலவரப்படி, மத்திய அரசின் மொத்தக் கடன் ரூ.201.17 கோடியாக (தற்காலிக மதிப்பீடு) உள்ளது. இது கடன்-ஜிடிபி விகிதத்தில் 58.2 சதவீதமாக மதிப்படப்படுகிறது.

கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு வருவாய் வரவுகளுக்கு கடன் சேவை (வட்டி செலுத்துதல்) விகிதம் 2020-21-இல் 41.6 சதவீதத்தில் இருந்து 2025-26-இல் 37.6 சதவீதமாக (தற்காலிக மதிப்பீடு) குறைந்துள்ளது. இது வருவாய் வரவுகள் மூலம் கடனுக்கான வட்டியைச் செலுத்தும் மத்திய அரசின் நிதித் திறனை குறிக்கிறது.மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையைவிட (ரூ.16.96 லட்சம் கோடி) பயனுள்ள மூலதனச் செலவு (ரூ.17.15 லட்சம் கோடி) அதிகமாக இருக்கும் என 2026-27 பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் மத்திய அரசின் கடன்கள் முழுவதுமாக சொத்து உருவாக்கத்துக்கே பயன்படுகிறது என்பது தெளிவாகிறது.

அதிகரிக்கப்பட்ட மூலதனச் செலவினம்: *2027-ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் கடன் சுமை ரூ.228.27 லட்சம் கோடியாக இருக்கும் என கணக்கிடப்படுகிறது. 2026-ஆம் நிதியாண்டில் இது ரூ.211.06 லட்சம் கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்டது.*

2021-ஆம் நிதியாண்டு முதல் 2026-ஆம் நிதியாண்டு வரை மூலதனச் செலவினமாக ரூ.44.03 லட்சம் கோடியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. ஜிடிபியில் மூலதனச் செலவின சதவீதம் அதிகரித்த தன் விளைவாக சாலைகள், ரயில்வே, நகர்ப்புற உள்கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் எண்மத் தொடர்பு உள்ளிட்ட துறைகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான நிதி அதிகரிக்கப்பட்டது. இதனால் தளவாடங்களின் செயல்திறன், வேலைவாய்ப்பு மற்றும் தனியார் முதலீடு அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பி.க்களின் குரல்கள்!



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் தமிழகத்தைச் சேர்ந்த மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய முக்கிய கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் அளித்துள்ள பதில்களின் சுருக்கம் வருமாறு:

மக்களவையில்...

சேலம் உருக்கு ஆலையின் நவீன திறன்கள் என்ன?

இது குறித்து மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலு எழுப்பியகேள்விக்கு, மத்திய எஃகுதுறைஇணைஅமைச்சர்பூபதிராஜு சீனிவாச வர்மா அளித்த பதிலில், 'சேலம் உருக்கு ஆலையின் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. உற்பத்தியைப் பெருக்கவும், மதிப்பு கூட்டப்பட்ட துருப்பிடிக்காத எஃகு உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்துக்கான வரிப் பகிர்வு குறைகிறதா?

இது குறித்து திமுக எம்.பி.க்கள் கனிமொழி, கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்விக்கு மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் செளதரி அளித்த எழுத்துபூர்வ பதிலில், '16-ஆவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழகத்துக்கான வரிப் பகிர்வு 4.097 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது (15-ஆவது நிதிக் குழுவில் 4.079%)' என்று கூறியுள்ளார்.

தூத்துக்குடி முத்துக்கு எப்போது புவிசார் குறியீடு?

தூத்துக்குடி முத்துக்கு புவிசார் குறியீடு வழங்கும் நிலை குறித்து எம்.பி. கனிமொழி எழுப்பிய கேள்விக்கு, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்துள்ள பதிலில், 'இது தொடர்பாக கடந்த ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி விண்ணப்பிக்கப்பட்டது. நிலுவையிலுள்ள படிவச் சரிபார்ப்பு அறிக்கைக்கு விண்ணப்பதாரர் பதிலளித்ததும், சட்ட விதிகளின்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதியில் தமிழகத்தின் தர நிலை என்ன?

நாட்டின் மொத்த வர்த்தக ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு என்ன? என்று எம்.பி.க்கள் ஜி. செல்வம், டாக்டர் ராணி ஸ்ரீகுமார் எழுப்பிய கேள்விகளுக்கு, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அளித்துள்ள பதிலில்,

'கடந்த 2025-26 நிதியாண்டில் தமிழகத்தின் ஏற்றுமதி மதிப்பு அமெரிக்க டாலர் மதிப்பில் 5,890 கோடியை எட்டியுள்ளது. நாட்டின் ஏற்றுமதியில் தமிழகம் தொடர்ந்து 3-வது இடத்தில் உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

கழிவுநீர் தொட்டி உயிரிழப்புகள் விவரம் என்ன?

கைகளால் கழிவுநீர் கழிவுகளை தூய்மைப்படுத்தும் தூய்மைப் பணியாளர்களின் உயிரிழப்புகள் குறித்து விடுதலை சிறுத்தைகல் கட்சி உறுப்பினர் டி. ரவிகுமார் எழுப்பிய கேள்விக்கு, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் ராமதாஸ் அதாவலே அளித்த பதிலில், 'தமிழகத்தில் கடந்த ஜனவரி 1 முதல் ஜூன் 30-ஆம் தேதிவரை கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தப்படுத்தும்போது 38 பேர் உள்பட பலர் உயிரிழந்துள்ளனர். இத்தகைய செயல்பாட்டுக்கு விதிக்கப்பட்ட தடை சட்டத்தை மீறினால் 2 ஆண்டு சிறை அல்லது ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

திருச்சி பிஎச்இஎல் நவீனமயமாகியுள்ளதா?

இது குறித்து மதிமுக உறுப்பினர் துரை வைகோ எழுப்பியிருந்த கேள்விக்கு, மத்திய கனரக தொழில்துறை இணை அமைச்சர் பூபதி ராஜு சீனிவாச வர்மா பதிலளிக்கையில், 'பிஎச்இஎல் திருச்சி பிரிவை மேம்படுத்த ரூ.70 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது அந்நிறுவனத்துக்கான ஆர்டர்கள் ரூ.43,927 கோடியாக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இ-ரிக்ஷா சைபர் பாதுகாப்பு ஆபத்தானதா?

இ-ரிக்ஷா பாதுகாப்பு குறித்து காங்கிரஸ் எம்.பி.க்கள் மாணிக்கம் தாகூர், விஜய் வசந்த் எழுப்பிய கேள்விக்கு, மத்திய கனரக தொழில் துறை இணை அமைச்சர் பூபதி ராஜு சீனிவாச வர்மா அளித்த பதிலில், 'இ-ரிக்ஷாக்களில் உள்ள ப்ளூடூத் குறைபாடுகளைப் பயன்படுத்தி அவற்றின் பேட்டரிகளை செயலிழக்க வைக்கும் கைப்பேசி செயலிகள் கண்டறியப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்படாத அத்தகைய செயலிகளை ஆண்ட்ராய்டு, ஆப்பிள் ப்ளே ஸ்டோர்களில் நீக்க 'சிஇஆர்டி-ஐஎன்' என்ற இந்திய கணினி அவசரகால எதிர்வினை குழு நடவடிக்கை எடுத்துள்ளது' என்று கூறியுள்ளார்.

மாநிலங்களவையில்...

தன்னிறைவடைந்ததா கலங்கரை விளக்கங்கள்?

இது குறித்து மாநிலங்களவையில் அதிமுக உறுப்பினர் ஐ.எஸ். இன்பதுரை எழுப்பிய கேள்விக்கு, மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் பாதைகள் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் அளித்த பதிலில், 'சென்னை கலங்கரை விளக்கத்தில் (லைட்ஹவுஸ்) அதிநவீன ரேடார், நவீன கண்காணிப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது. நாகப்பட்டினம், ராமேசுவரம், பாண்டியன் தீவு ஆகிய நிலையங்கள் அதிநவீன மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன' என்று தெரிவித்துள்ளார்.

அமோனியா வாயு கசிவு இனி தடுக்கப்படுமா?

திருவள்ளூர் அம்மோனியா வாயு கசிவு சம்பவத்தை மேற்கோள் காட்டி அதிமுக எம்.பி. தனபால் எழுப்பிய கேள்விக்கு, மத்திய ரசாயனம் மற்றும் உரங்கள் துறை இணை அமைச்சர் அனுப்ரியா படேல் பதிலளிக்கையில் 'ஆபத்தான ரசாயனங்கள் கையாளப்படும் இடங்களில் தொழிலாளர்கள் தங்க வைக்கப்படக் கூடாது என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு தகவல் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் அரசு தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகிறது' என்றார்.

ஜன் தன் கணக்குகள் எத்தனை?

தமிழகத்தில் ஜன் தன் கணக்குகள் குறித்து அதிமுக உறுப்பினர் ஆர். தர்மர் எழுப்பிய கேள்விக்கு, மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் செளதரி பதிலளிக்கையில் 'தமிழகத்தில் 1.91 கோடி ஜன் தன் கணக்குகள் தொடங்கப்பட்டு, 99.98% கிராமங்களுக்கு வங்கிச் சேவைகள் சென்றடைந்துள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி கட்டுக்குள் உள்ளதா?

இது குறித்து திமுக எம்.பி. கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எழுப்பிய கேள்விக்கு, மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணை அமைச்சர் பி.எல். வர்மா பதிலளிக்கையில், 'நாடு முழுவதும் 579 மையங்கள் மூலம் 41 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கண்காணிக்கப்பட்டு, அவசியமான பொருள்கள் கையிருப்பில் இருப்பதன் மூலம் அவற்றின் விலை சீராக வைக்கப்படுகிறது' என்று கூறியுள்ளார்.

SMFG Grihashakti — SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்.

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான 30 நாள் E-ஏல விற்பனை அறிவிப்பு

வ. எண்	கடன்தாரர்(கள்) ஜாமீன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	சொத்துக்களின் விவரம்	குறைந்தபட்ச விலை / டேவணித்தொகை	E-ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித் தொகை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்
1.	கடன் கணக்கு எண் : 6609639511612045 & 609639211609051 1. சுதா தங்கராஜ் 2. தங்கராஜ் T	ஆவண எண் 496/2019-இன்படி ... அளவு விபரங்கள்: கிழக்கு மேற்காக வடக்கில் - 8.6 மீட்டர், ... மொத்தம் 61.77 சதுர மீட்டர் ...	ரூ.18,40,000/- / ரூ.1,84,000/-	28.09.2026 அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை	26.09.2026

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள: மதுசூதனன் G, கைப்பேசி எண்: +91 99404 44937, மின்னஞ்சல் முகவரி: Madhusudanan.G@grihashakti.com மற்றும் திரு நிலாய் டே., கைப்பேசி எண்: 8655619157, மின்னஞ்சல் முகவரி: Nilay.Dey@grihashakti.com. (https://BidDeal.in மற்றும் https://www.grihashakti.com/pdf/E-Auction.pdf)

இடம்: தூத்துக்குடி, தமிழ்நாடு. நாள்: 21.07.2026. ஒப்- அதிகாரப்பூர்வ அலுவலர், SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்.

ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பொது அறிவிப்பு (அசையா சொத்து விற்பனைக்கான மின்னணு ஏலம்)

கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)/ சட்டபூர்வ வாரிசுகள் / சட்டபூர்வ பிரதிநிதிகள் பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி	சுவாதீன வகை	அடிப்படை விலை / டேவணித் தொகை
HHFNAELAP 240000 49161	திரு.விருத்திரன் பிள்ளை P, திரு/திருமதி விருத்திரன்பிள்ளை, திரு/திருமதி.பார்வதி, த/பெ.வதுகுதன பெருமாள்	16.03.2026 13.07.2026 ம தேதியின் படி ரூ.19,01,798.65/-	ஆக்கபூர்வ சுவாதீனம்	ரூ.23,72,493/- / ரூ.2,37,249/-

ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகள் : ஏல விற்பனை வலைதளம் மூலம் 25 ஆகஸ்ட் 2026 (மின்னணு ஏல தேதி) அன்று காலை 11.00 மணி ... www.herohousingfinance.com ... தேதி : 22.07.2026 இடம் : திருநெல்வேலி

தமிழ்நாடு அரசு — ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் — மின்ஒப்பந்தப்புள்ளி கோருதல் நபார்டு ஆர்.ஐ.டி.எப் 2026-27

1. முழுமையான விபரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதளத்தினை பார்க்கவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழியாக நபார்டு ஆர்.ஐ.டி.எப் 2026-27-ன் ... 2 பணிகளை 1 சிப்பமாக ... மின்ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 22.07.2026 முதல் 05.08.2026 அன்று 15.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கியமான நாட்கள்

1.	மின் ஒப்பந்த நருனாக்கள் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம்	05.08.2026 15.00 மணி
2.	மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படவேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	05.08.2026 15.00 மணி
3.	மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	05.08.2026 16.00 மணி

5. இதர விபரங்கள் ஒப்பந்த நருனாவில் தெரிந்து கொள்ளலாம்.

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கன்னியாகுமரி மாவட்டம் @ நாகர்கோவில்

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா — Union Bank of India. பிராந்திய அலுவலகம் : திருநெல்வேலி 2வது தளம், BSNL நிர்வாக கட்டிடம், தெற்கு பைபாஸ் ரோடு, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-627003. போன் : 0462 - 2914144.

தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள வாடிக்கையாளர் தங்க நகைகளை வங்கியிடம் அடமானம் வைத்து கீழ்க்கண்ட விவரப்படி கடன் பெற்றுள்ளார், கடன் ஒப்பந்த விதிமுறைகளின்படி நிலுவையை வட்டியுடன் செலுத்த தவறியதால் அக்கடன் வாராக்கடன் / ஓவர் டியூ (overdue) இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ... கடன்தாரர் மேற்படி கடனை 25.08.2026ம் தேதியன்று அல்லது அதற்கு முன்பாக கட்டிமுடித்து நகையை திரும்ப பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். தவறும் பட்சத்தில் வங்கியால் மேற்படி நகைகளை 26.08.2026 தேதியன்று காலை 11.00 மணியளவில் கீழே குறிப்பிட்டுள்ள கிளையில் வைத்து பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என எச்சரிக்கப்படுகிறார்.

கிளையின் பெயர்	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
தர்மபுரம்	ஜோஸ்பின் கோல்டாஸ். A	88.3

ஏல நிபந்தனைகள் : 1. இந்த ஏலமானது 'உள்ளது உள்ளவாறே, என்ன உள்ளதோ அவ்வாறே, புகார் ஏற்கப்படாத நிலையில்' என்கிற அடிப்படையில் நடைபெறும். 2. நகைகளின் ஏலத்திற்குப் பிறகு எவ்வித புகாரும் ஏற்கப்பட மாட்டாது என்பதையும் அறிந்து கொள்ளவும். 3. எந்தவொரு நிலையிலும் எந்தவொரு அல்லது அனைத்து ஏலக் கேட்பையும் ஏற்கவோ, மறுக்கவோ வங்கி உரிமையுடையது. நிபந்தனைகளில் மாற்றம் செய்து கொள்வதும் வங்கியின் முடிவின்படியே நடைபெறும். 4. நகை ஏலத் தொகைக்கு 3% சதவீத GST வரி வசூலிக்கப்படும்.

தொடர்புக்கு : தர்மபுரம் கிளை : மொபைல் : 9207251157

இடம் : திருநெல்வேலி. தேதி : 22.07.2026. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

பாங்க் ஆஃப் பரோடா — Bank of Baroda — பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர், 3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை - 625 014, போன் : 0452 - 2601013, மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு. பிற்சேர்க்கை -IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடன்தாரர்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.திரு.Y.ஜஸ்டின் சுந்தர்ராஜ் (கடன்தாரர்), த/பெ.திரு.யோனா, M/74, பச்சையாங்குப்பம், ஹவுசிங் போர்ட், கடலூர் - 607003, மேலும் : திரு.Y.ஜஸ்டின் சுந்தர்ராஜ், த/பெ.யோனா, எண்.24-14A, கஞ்சபுரம் அஞ்சல், ஏழுதேசம் கிராமம், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி - 629 154 2.திரு.N.விஜில்குமார் (சார் கடன்தாரர் மற்றும் அடமானதாரர்), த/பெ.திரு.நேசய்யன், கதவு எண்.18-221, எடத்தாங்குவிளை வீடு, கஞ்சபுரம் அஞ்சல், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி - 629 154, மேலும் : திரு.N.விஜில்குமார், த/பெ.திரு.நேசய்யன், கதவு எண்.6/11/16, புதுவால்புத்தன் வீடு, எடத்தாங்குவிளை வீடு, கஞ்சபுரம் அஞ்சல், ஏழுதேசம் கிராமம், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி - 629 154	கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கொல்லங்கோடு சார் பதிவாளர் அதிகார வரம்பு, விளவங்கோடு தாலுகா, ஏழுதேசம் பஞ்சாயத்து, ஏழுதேசம் கிராமம், பட்டா எண்.5033, மறு சர்வே எண்.329/22, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கதவு எண்.24-14A கட்டிடம் அடங்கிய 3.5 சென்ட் சொத்து. எல்லைகள்: வடக்கே - சுபைதா மற்றும் செல்லசுவாமியின் சொத்து, தெற்கே - ரோடு, கிழக்கே - மீனாட்சியின் சொத்து, மேற்கே - பால்ராஜின் சொத்து. இச்சொத்து திரு. நேசய்யன் மகன் திரு. N.விஜில் குமாருக்குச் சொந்தமானது. வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL. அட்சரேகை : 8.262135 மற்றும் தீர்க்கரேகை : 77.151673. BAANKNET Property ID: BARB392320260001	ரூ.21,97,809/- (ரூபாய் இருபத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று ஒன்பது மட்டும்) 21.07.2026 தேதியன்று, மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	14.08.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.29,30,000/- (ரூபாய் இருபத்து ஒன்பது லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2. ரூ.2,93,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மட்டும்) 3. ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)	கொள்நிலை (Physical) சுவாதீனம்	13.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்-ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 9790247824; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 21.07.2026 / இடம் : மதுரை. (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) / பேங்க் ஆஃப் பரோடா